DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.163/20

Deposition of Witness: PW 1

| | |
|---|---|
| Name வடிவேல் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.09.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் நரிகுறவர் காலணியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். 2 வருடத்திற்கு முன்பு ரிலையன்ஸ் பெட்ரோல் அருகே எனது மாமனார் மளிகைகடைக்கு சென்று பொருள் வாங்கிவிட்டு வரும் போது தெற்கிலிருந்து வந்த கார் மோதி சம்பவ இடத்திலேயே எனது மாமனார் இறந்துவிட்டார். அவரது உடலை ஆம்புலன்ஸில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அதற்கு பின்பு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார் மனு அசாஆ 1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

விபத்துகுறித்து எனக்கு நேரடியாக விபரம் தெரியாது என்றால் சரிதான். நான் கேள்விபட்டதை வைத்து தான் முதல்விசாரணையில் கூறியுள்ள விபரங்களை கூறுகிறேன் என்றால் சரிதான். யார் ஆம்புலன்ஸில் ஏற்றி அனுப்பிவைத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்துகுறித்து எனக்கு நேரடியாக விபரம் தெரியாது என்றாலும் பொய்யான தகவலின் அடிப்படையில் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. புகாரில் கூறியுள்ள விரபங்களும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது என்றாலும் அதில் காட்டியுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். இறந்தவர் என் மாமனார் என்பதால் பொய்யான தகவல்களை சொல்லி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.